**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த 26 வழக்குகளில் பெரும்பாலானவர்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

**திரு. கே. எ. வகாப் :** மதுவிலக்கை ஒத்திவைத்து பிறகு பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைந்திருக்கிறதா? அப்படி அதிகப் படியாகக் குறைந்திருந்தால் அந்தப் பரிசுச் சீட்டுகளை வெளி யிடுவதுபற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மதுவிலக்கை ஒத்தி வைத்தது பரிசுச் சீட்டு இரண்டையும் இணைக்க முடியாது என்றாலும் 1968-69-ல் இருந்து கணக்குப் பார்த்தால் 1972-73-ல் விற்பனை குறைந்துதானிருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேலும் கவர்ச்சி உள்ளதாக ஆக்கி விற்பனையை அதிகரிக்க ஏதாவது புதிய திட்டங்கள் அரசிடம் உள்ளனவா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர் களும் அரிய கருத்துக்களை வழங்கினால் அவைகளும் பரிசீலிக்கப் படும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** பரிசுச் சீட்டுத் தொகை மீது மத்திய அரசு 35 சத விதம் வரி விதித்திருப்பதால் பரிசுச்சீட்டுத் திட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் மத்திய அரசு இந்த வரி விதிப்பிலிருந்து ஏதாவது பங்குத் தொகையை மாநில அரசுக்குத் தருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது வருமான வரி. பொதுவாக மத்திய அரசிலிருந்து வருகிற வரிப் பங்குத் தொகையைக் கணக்கிடுகிற நேரத்தில் அது கணக்கிடப்படும். ஆனால் 33-1/3 சதவிதம் வருமான வரி இந்தப் பரிசுச் சீட்டிலிருந்து லாபம் பெறுகிறவர்கள், பரிசு பெறுபவர்களுக்கு விதிப்பதன் காரணமாக இது ஓரளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மைதான்.

*Endowments for Tamil Development*

* 328 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the Endowments made by Kasimutt in Thanjavur district for the promotion of Tamil learning under the Presidentship of the Collector of the district for 1970–71?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தஞ்சையிலுள்ள காசிமடம், தமிழ்க் கல்வியை ஊக்குவிப்பதற்கென அறக்கட்டளை எதையும் 1970-71-ல் நிறுவவில்லை.

**புலவர் சி. பழனிச்சாமி :** இந்த மடாதிபதிகள் தமிழ் அறிவை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு பக்திப் பாடல்களைக் கொண்ட வைதீக நூல்களைத்தான் பரப்புகிறார்கள். எனவே அவர்கள் அறிவியல் நூல்களையும் நல்ல பகுத்தறிவு நூல்களையும் வெளியிடுமாறு அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுக்கு நாம் கட்டளையிட இயலாது. அவர்கள் அவர்களது நெறியினைப் பின்பற்றியும், அவர்கள் விரும்புகிற அளவிலும்தான் அவர்களது பணியைச் செய்யமுடியும். ஆகவே அரசாங்கம் தலையிடுவதற்கில்லை.

## குத்தாலத்திற்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளி

* 329 வினு—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

## *Over-head water tank for Lloyds road area.*

* 330 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any over-head water tank has been put up in the Corporation Schools in Lloyds Road, Madras; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) சென்னை இலாயட்ஸ் சாலைப் பகுதியில் மேல் மட்ட நீர்த்தொட்டி கட்ட தகுதியான இடம் கிடைக்காததால், அப்பகுதி பொதுமக்கள் வசதிக்காக அங்குள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வரம்பிற்குள் சென்னை மாநகராட்சி நீர் வழங்கும் துறையினரால் ஒரு மேல் மட்ட நீர்த்தொட்டி கட்டப்பட்டுள்ளது.